
# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

## தொகுதி – IV




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் சி. மகாலட்சுமி

முனைவர் க. பழனிவேல்

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சி. மகாலட்சுமி**<br>**முனைவர் க. பழனிவேல்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2015 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476/1 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | VIII + 1629 - 2078 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 80800 - 61 - 5**


# International Conference on Elements of Arts and Human Values in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. C. Mahalakshmi, Dr. K. Palanivel** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | December, 2015 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | VIII + 1629 - 2078 |
| Prize | : | **Rs. 350/-** |

356. **Dr. T. Muraleeswari** 1706
THE UNFLINCHING CAPACITY FOR ENDURANCE:
SANTIAGO IN THE OLD MAN AND THE SEA

357. **முனைவர் க. பழனிவேல்** 1710
ஆண்டாளின் வாரணமாயிரம் பாடல்களில்
கலைக்கூறுகள்

358. **வீ. லட்சுமி** 1715
நற்றிணையில் இசைக் கருவிகள்

359. **முனைவர் கு. முத்துக்குமார்** 1721
இல்லற நெறியை இயற்கை நெறியாக்கிய
தமிழரின் விருந்தோம்பல் பண்பாடு

360. **கே. ரோகினி** 1726
வெளி நாட்டு யோகம்

361. **பி. நித்தியாணந்தம்** 1728
ஆறாம் பாவகமும், திருமண வாழ்க்கையும்

362. **பி. நித்தியாணந்தம்** 1731
சுக்கிரனின் திருவிளையாடல்

363. **எம். மீனாட்சி (வழிகாட்டி ஜோதிடர்)** 1736
உத்தியோகமும் உத்தியோக உயர்வும்

364. **என். முத்து கிருஷ்ணன்** 1740
பிரஸ்ணம் சாஸ்திரம் - ஓர் அறிமுகம்

365. **ஆர்.எஸ். பவித்ரா தேவி** 1744
திருமணமும் நட்சத்திரமும்

366. **இந்திரா** 1750
மாந்தியின் தன்மையும் கிரகச் சேர்க்கையும்

367. **வி. பரமேஸ்வரன்** 1755
ஜோதிடக் கலையில் காதல் திருமணங்கள்

368. **எ.கே. முருகன் குமார்** 1760
என் கணிதமும் திருமண வாழ்வும்

369. **எஸ். பூங்கொடி** 1765
ஜோதிடக் கலையில் அரசு உத்தியோகம்

370. **க. வனிதா** 1770
திருமுறைகளில் மானுட விழுமியங்கள்

371. **எஸ். மைதிலி** 1774
சிறுபாணாற்றுப்படையில் சூழலியல் உணர்வுகள்

372. **முனைவர் மு. கவிதாதேவி** 1779
திருமந்திரம் கூறும் திருக்கூத்தின் விழுமியங்களும்,
கலைக்கூறுகளும்

# 357. ஆண்டாளின் வாரணமாயிரம் பாடல்களில் கலைக்கூறுகள்

**முனைவர் க. பழனிவேல்**
உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

நுட்பமான கலைத்திறனும், சிறந்த வெளிப்பாட்டுத்தன்மையும், நுண்ணிய பொருண்மைகளையும், ஈர்ப்பு சக்திமிக்க அழகியல் கூறுகளையும் கொண்டதைக் கலை எனலாம். அக்கலையின் பிரிவுகளில் முக்கியமானதாக இலக்கியக்கலை கருதப்படுகிறது. மேலும் படைப்புக் கலைகளில் தனிமனித ஒழுக்கம், சமுதாய ஒற்றுமை, மானுட விழுமியங்கள், கலைக்கூறுகள் முதலானவற்றைக் கொண்ட ஓர் ஒப்பற்ற கலையாக இலக்கியக் கலைவிளங்குகிறது. இக்கலை சங்க இலக்கியம் முதலாக இக்கால இலக்கியமென இன்று பல பரிணாமங்களில் வளர்ச்சியுற்று கலையுலகில் கோலோச்சுகிறது என்றால் அதுமிகையல்ல. இலக்கியக் கலை பாடுபொருள், வடிவம் என்ற இருநிலைகளில் வகைமைப்படுத்தப்பட்டுள்ளது. இலக்கிய வகைமைகளில் பக்தி இலக்கியங்கள் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. ஏனைய இலக்கியங்களைக் காட்டிலும் பக்தி இலக்கியம் மாறுபட்டது. ஏனெனில் மற்ற இலக்கியங்கள் மனிதனால் மனிதனுக்காகப் படைக்கப்பட்டவை. ஆனால் பக்தி இலக்கியங்கள் மனிதனால் கடவுளுக்காகப் படைக்கப்பட்டவை. இதில் சிறந்த, உண்மையான, மாறாத கருத்துக்களே பாடுபொருள்களாக இடம்பெற்றுள்ளன. தெய்வங்களுக்காகப் படைக்கப்பட்டவையாதலால் அழகியல் தன்மை மிகுந்துள்ளது எனலாம். அழகியல் தன்மைக்கு அடிப்படையான கலைக்கூறுகளைக் கண்டறிவதும் அவற்றின் தேவை மற்றும் பயன்பாட்டினை ஆய்ந்துரைப்பதும் இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

## வாரணமாயிரம் - ஆண்டாள்

பெரியாழ்வாரால் கண்டெடுத்து வளர்க்கப்பட்டவர்; திருமால் மீது மாளாக் காதல் கொண்டவர்; பல பதிகங்களைப் பாடியருளியவர்; பன்னிரு ஆழ்வார்களில் இடம்பெற்றிருக்கும் ஒரே பெண் ஆழ்வார்; சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்றெல்லாம் அடையாளப் படுத்தப்படுபவர் ஆண்டாள். இவரை ஆண்டாள் நாச்சியார் என்றும் விளிப்பதுண்டு. நாச்சியார் திருமொழி மற்றும் திருப்பாவை என்பன இவரது படைப்புகளாகும். இவற்றுள் நாச்சியார் திருமொழி 14 பதிகங்களைக் கொண்டதாக விளங்குகிறது. இதனுள் 10 பாடல்களைக்